








# கலைஞர் கடிதம்

உடன்பிறப்பே,

நமது அண்ணாவின் பெயரால் அமைக்கின்ற அறிவாலயத்திற்குக் கழகத்தின் சார்பில் பெருநிதி திரட்ட வேண்டுமென்று முடிவெடுத்து அதற்கான நன்கொடைச் சீட்டுகள் எல்லா மாவட்ட, வட்ட, கிளை அமைப்புகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. டிசம்பர் முதல் நாளில் இருந்து அந்தச் சீட்டுகளை வீடுவீடாகச் சென்று நீ விற்றிட வேண்டும். ஒரு பைசா பத்து பைசா என்று நன்கொடைச் சீட்டுகள் வழங்கப்படுவதற்குக் காரணமே, ஏழை, எளிய, நடுத்தர, தொழிலாள மக்கள் ஒவ்வொருவருக்கும் அந்த அறிவாலயம் அமைவதில் பங்கு இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் என்பதை நீ ஒவ்வொரு வீட்டிலும் எடுத்துச் சொல்லி நிதியைத் திரட்ட வேண்டும். நமது கழகத் தலைவர்கள், முன்னணியினர் டிசம்பர் எட்டு, ஒன்பது ஆகிய இரு நாட்களில் தமிழகத்தில் கலந்து கொள்கின்ற அண்ணா அறிவாலய நிதி திரட்டுக் கூட்டங்களில் அவர்களிடம் பணமுடிப்புக்களாகத் தொகைகளை வழங்கிடத் தயாராக இருக்க வேண்டும். நான், டிசம்பர் 15, 16 ஆகிய நாட்களில் மதுரை, திருச்சி, தஞ்சை, நாகை ஆகிய ஊர்த் திரட்டுக் கூட்டங்களில், என் உடன்பிறப்பே! உன்னைச் சந்திக்க இருக்கிறேன்; எட்டொன்பது நாட்களில் டெல்லிக்குச் செல்ல இருப்பதால்!

நாள்தோறும், சிற்றூர்களிலும், நகர்களிலும் சிலமணி நேரம் கூட அண்ணா அறிவாலய நிதியைத் திரட்டிட ஒதுக்கிக் கொண்டு உழைத்திடு!

'அறிவாலயம்' — நம்மை ஆளாக்கிய அண்ணாவுக்கு மிகப் பொருத்தமான பெயர். அந்த அறிவாலயத்தில் அண்ணாவின் சிந்தனைக் கனவுகள் பலவற்றைச் செயல்படுத்த, நீ அள்ளிக் கொடுத்திடு நிதியை!

பம்பரமெனப் பணியாற்றும் என் அன்புக் கண்மணியே, உன் ஆற்றலையும் அண்ணாவின் பால் கொண்ட உண்மை அன்பினையும் வெளிப்படுத்தக் கிடைத்த இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்!

அன்புள்ள
மு.க.

(முரசொலி 1.12.1973)

# வான்புகழ் கொண்ட கலைஞர்!



"தமிழால் பாரதி தகுதி பெற்றதும், பாரதியால் தமிழ் தகுதி பெற்றதும் என்னென்றுரைப்பேன். என்னென்றுரைப்பேன்! என்று பரவசமுற்று பாரதிதாசன் பாடியது போல். கலைஞரால் தமிழ் தகுதி பெற்றதும் தமிழால் கலைஞர் தகுதி பெற்றதும் என்னென்றுரைப்பேன், என்னென்றுரைப்பேன் என்று பரவசமுற்றுப் பாடிக் குதிக்கத் தோன்றுகிறது. தமிழுக்கும் தமிழ் இலக்கியத்துக்கும் தமிழ்ப் புத்தக வெளியீட்டாளர்களுக்கும் தமிழ் எழுத்தாளர்களுக்கும் கலைஞர் செய்திருக்கும் பேருதவிகள் சொல்லுக்குள் அடங்காதவை. இத்தகு தமிழ்த் தொண்டினை ஆற்றுகிற முதல்வர் தமிழகத்துக்குக் கிடைத்திருப்பது தமிழ் மக்களின் பேறு என்றே சொல்லவேண்டும். மேலும், கலைஞருக்கு இணையான முதல்வர் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்துக்கும் வாய்க்கவில்லை என்பதைப் பெருமையோடு நான் அடிக்கடி எண்ணிப் பார்க்கிறேன்.

ஒருமுறை அவரோடு பேசிக் கொண்டிருந்த போது, தமிழ்பால் தனக்கிருக்கும் அன்பினால் பிறமொழிப் பகைமையைத் தான் வளர்த்துக் கொண்டதில்லை என்பதற்குச் சான்றாகத் தன் புத்திரர்களில் ஒருவருக்குச் சூட்டிய 'ஸ்டாலின்' என்ற பெயரை மாற்ற வேண்டுமென்று ஒரு பள்ளிக் கூட நிர்வாகம் அவரிடம் சொன்னபோது, 'பள்ளிக் கூடத்தை மாற்றினாலும் மாற்றுவேனே தவிர, 'ஸ்டாலின்' என்ற பெயரை மாற்ற மாட்டேன்' என்று தான் கூறியதாகத் தெரிவித்தார்.


பாரதியார் மீதும், பாரதிதாசன் மீதும் மிகவும் ஈடுபாடு கொண்டவர் கலைஞர். தமிழுக்குச் 'செம்மொழி' அந்தஸ்து பெறுவதற்கு அவர் எடுத்துக் கொண்ட தனிப்பட்ட முயற்சிகளை நாம் அறிவோம். 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்' என்பது கலைஞருக்குச் சாலப் பொருந்தும்.



எழுத்தாளர்
**ஜெயகாந்தன்**

### குடிமைப் பயிற்சி மையம்: என் உயரத்துக்குக் காரணமான

# கலைஞரை என்றும் மறவேன்!



"கலைஞர் என்றால், தமிழ்நாட்டின் முன்னேற்றம். அவர் சிந்தித்துச் செயல்படுத்தியது தான் தமிழ்நாட்டின் ஒவ்வொரு திட்டமும். அவர் கைகளுக்கு ஆட்சி அதிகாரம் வந்த போதெல்லாம் 'மக்களுக்கு என்ன தேவையாக இருக்கிறது யாருக்கு என்ன செய்ய வேண்டும்' என யோசித்து யோசித்துச் செயல்படுத்தி இருக்கிறார். தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட பொருளாதாரத்தில் நலிவடைந்த மக்களின் முன்னேற்றத்துக்கு என்ன செய்யலாம் என சிந்தித்துக் கொண்டே இருந்தவர்.

அதில் ஒன்றுதான் 1971 ஆம் ஆண்டில் அவர் முதலமைச்சராக இருந்தபோது தொடங்கி வைத்த 'குடிமைப்பணிப் பயிற்சி மையம். அந்த மையத்தில் பயின்ற நான்காவது 'பேட்ச்' நான். அப்படி அவர் உருவாக்கிய ஒரு கட்டமைப்பில் இருந்துதான் கிராமப்புற மாணவியான நான், ஐ.பி.எஸ் தேர்ச்சி பெற்றேன். அதனால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை எந்த நாளும் நன்றியுடன் நினைத்துப் பார்ப்பேன்.

நான் பிறந்த ஊர் தர்மபுரி. அங்குள்ள குமாரசாமிப் பேட்டை என்கிற பகுதியில் வசித்தோம். அப்பகுதி முழுவதுமே தி.மு.க.வினர். கிட்டத்தட்ட எல்லோர் வீடுகளுக்கும் தி.மு.க. சார்ந்த ஏடுகள் வரும். தெரு முனையில், இருந்த தி.மு.க.படிப்பகத்தில் யார் வேண்டுமானாலும் சென்று படிக்கலாம். அப்படியான சூழலில், எனது பள்ளிப் பருவத்தில் இருந்த வாசிப்புப் பழக்கத்தினால் கலைஞர் படைப்புகளின் அறிமுகம் தொடங்கியது.

அவர் எழுத்துகளை வாசிப்பது பிரமிப்பாக இருக்கும். அவரது படங்களின் வசனங்களைக் கேட்டும் அவர் எழுத்துகள் மீது ஈர்ப்பும் கொண்டேன். தூரத்தில் இருந்தே கலைஞரின் படைப்புகளை நேசித்த மாணவியாக இருந்தேன்.

1969ஆம் ஆண்டில் கலைஞர் அமைத்த சட்டநாதன் ஆணையத்தின் பரிந்துரையின்படி, கலைஞர் உருவாக்கிய 'குடிமைப்பணிப் பயிற்சி மையம்' தமிழ்நாட்டில் இருந்து முதல் தலைமுறையாகப் படித்து வந்த இளைஞர்களுக்கு ஆட்சிப்பணிக் கனவுகளைத் தொடங்கி வைத்தது. அப்போதெல்லாம் டெல்லியில் சென்று படித்தால் தான் ஐ.ஏ.எஸ். ஆக முடியும் என்கிற நிலை இருந்தது. அதை முறியடித்தவர் கலைஞர்!

எந்தச் செலவும் இல்லாமல் குடிமைப் பணித் தேர்ச்சி பெற்று, இந்த வாழ்க்கையை அளித்த தலைவராக கலைஞரை என்றும் நினைத்துப் பார்க்கிறேன்!



முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரி
**திலகவதி**